## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
## 04 ஆகஸ்ட் 2023 / 17 முஹர்ர்ரம் 1445 ஹிஜ்ரி

## <u>மற்றவர்களின் நலனைப் பற்றி சிந்தித்தல்</u>

الحَمْدُ لِلَّهِ الَّذِي جَعَلَ فِي اخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ آيَاتٍ لِأُولِيْ الْأَلْبَابِ، وَجَعَلَ الْمُحَرَّمَ مِنَ الأَشْهُرِ الْحُرُمِ تَذْكِيْرًا لِحُرْمَتِهِ لِمَنْ تَابَ إِلَيْهِ وَأَنَابَ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ الْكَرِيْمُ الْوَهَّابُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الَّذِي اصْطَفَاهُ وَأَنزَلَ عَلَيْهِ الْكِتَابَ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا محمدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ صَلَاةً نَنَالُ بِهَا شَفَاعَتَهُ يَوْمَ الْحَشْرِ وَالْحِسَابِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

**எனது அன்பிற்குரிய இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும் அல்லாஹ் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" [பக்தியை] அதிகரித்துக் கொள்ள தொடர்ந்து முயற்சிப்போமாக! அல்லாஹ்வுக்கு அடிபணிந்த, அல்லாஹ்விடம் மன்னிப்பைப் பெற்ற அடியார்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! ஆமீன்.

**அல்லாஹ்வின் அருள்பெற்ற எனது சக முஸ்லிம்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱجْتَنِبُوا۟ كَثِيرًا مِّنَ ٱلظَّنِّ إِنَّ بَعْضَ ٱلظَّنِّ إِثْمٌ ۖ وَلَا تَجَسَّسُوا۟ وَلَا يَغْتَب بَّعْضُكُم بَعْضًا ۚ أَيُحِبُّ أَحَدُكُمْ أَن يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ تَوَّابٌ رَّحِيمٌ ﴿١٢﴾

பொருள்: மு.்மின்களே! [ஓரிறை நம்பிக்கையாளர்களே] [சந்தேகமான] பல எண்ணங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; ஏனெனில், நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; [பிறர் குறைகளை] நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்துக் கொண்டிருக்காதீர்கள்; அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம்; உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? [இல்லை] அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன். [அத்தியாயம்: அல்-ஹுஜுராத், வசனம்: 12]

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, பாரபட்சமான எண்ணம் கொள்வது கூடாது என நமக்கு நினைவூட்டுகிறது. காரணம், பாரபட்சமான எண்ணம் கொள்வதானது ஒருவர் சிந்திக்காமல் விரைவாகத் தீர்ப்பளிக்கக் காரணமாகி விடுகிறது; மற்ற மக்களைத் தரக் குறைவாகக் கருதத் தூண்டுவதாக உள்ளது. இது போன்ற நடத்தைகள் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டவையாகும்.

**எனது சகோதர சகோதரிகளே!**

நாம் நமது அன்றாட வாழ்க்கையில் பலதரப்பட்ட வாழ்க்கை வழிமுறைகளைச் சேர்ந்த, வித்தியாசமான மக்களைச் சந்தித்து வருகிறோம். சிலவேளைகளில், நமது வாழ்க்கைக்கு முற்றிலும் மாற்றமான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள தனிநபர்களைச் சந்திக்கின்றோம்; நமது

வாழ்க்கையோடு அவர்களின் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கைச் சோதனைகளை அவர்கள் எதிர்கொண்டு வருவதைக் காண்கிறோம். தமது உடல்களில் பச்சைக் குத்திக் கொண்டுள்ளவர்களையும் நாம் சந்திக்கின்றோம். இது போன்று பல நபர்களை நாம் சந்திக்கின்றோம். இங்கு கவலைக்குரிய விஷயம் யாதெனில், இந்த மக்கள் விஷயத்தில் இவர்கள் நல்லவர்கள் இல்லை என உடனே தீர்ப்பளித்து விடுகிறோம்; அவர்களைத் தரக் குறைவாகக் கருதி விடுகிறோம்; மறுபுறம், அவர்களை விட நாமே சிறந்தவர்கள் எனவும் கருதிக் கொள்கிறோம்.

சுப்ஹானல்லாஹ் [அல்லாஹ் மேன்மையானவன்; பரிசுத்தமானவன்!]. பாரபட்சமான எண்ணத்தை நாம் பெற்றிருப்பதானது, இது போன்ற தனிநபர்களை நாம் அணுகுவதை விட்டும், அவர்களிடம் தோழமை கொள்வதை விட்டும் தடுப்பதாக உள்ளது. அதனைத் தான் இப்போது நாம் செய்து வருகிறோம். மாறாக, அவர்களின் கருத்துக்களை நாம் கேட்பவர்களாக இருக்க வேண்டும்; அவர்களின் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் நிலைகளை நாம் கிருபையுடனும் புரிந்துணர்வுடனும் அணுகினால், அவர்களுக்கு நேர்வழியின் பால் வழிகாட்டுவதற்காக அவர்களுடன் இணைந்து நாம் செயல்பட முடியும்.

**எனது சகோதர, சகோதரிகளே!**

நாம் முஸ்லிம்கள் மற்றும் ஓரிறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், நமது வாழ்க்கையில் மற்றவர்களைப் பற்றிய தவறான எண்ணத்தைக் கொண்டிருப்பது ஒருபோதும் கூடாது. நமது வாழ்க்கைப் பயணம் எப்படி முடியும் என நமக்கே தெரியாமலிருக்கும் போது மற்றவர்களை விட நாமே உயர்ந்தவர்கள் என நம்மை நாம் எப்படிக் கருதிக் கொள்ள முடியும்? நற்காரியங்களைச் செய்வதில் பரிபூரணத்துவம் பெற்று விட்டோம் என நம்மை நாம் கருதிக் கொள்ள முடியுமா? நாம் நிறைவேற்றி வரும் வணக்க வழிபாட்டுச் செயல்கள் நமக்குச் சிறந்த முடிவைத் தரும் என உறுதியாகக் கூற முடியுமா? இதுபோன்ற கேள்விகளை நமக்கு நாம் அடிக்கடி கேட்டுக்

கொள்ள வேண்டும்; அப்போதுதான், நாம் தொடர்ந்து பணிவுடன் காணப்படுவோம்.

நமது இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ள பின்வரும் ஹதீதில் நாம் சிந்தனை செய்ய வேண்டும்:

فَإِنَّ الرَّجُلَ مِنْكُمْ لَيَعْمَلُ حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَ الْجَنَّةِ إِلاَّ ذِرَاعٌ، فَيَسْبِقُ عَلَيْهِ كِتَابُهُ، فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ، وَيَعْمَلُ حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَ النَّارِ إِلاَّ ذِرَاعٌ، فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ، فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ

பொருள்: உங்களில் ஒருவர் தொடர்ந்து நற்காரியங்களைச் செய்து வருகிறார்; எந்த அளவுக்கெனில், அவருக்கும் சொர்க்கத்துக்கும் மத்தியில் ஒரே ஒரு முழம் தான் உள்ளது; [அந்த ஒரு முழம் அளவுக்கும் அவர் நற்காரியத்தைச் செய்து விட்டால் அவர் நிச்சயம் சொர்க்கம் புகுந்து விடுவார் எனும் நிலை உள்ளது]. இந்நிலையில், அவருக்கு எழுதப்பட்டுள்ள விஷயங்கள் அவரை முந்தி விடுகின்றன; அதன் காரணமாக அவர் நரகவாசிகளின் செயல்களைச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்; நரகத்தில் புகும் நிலை அவருக்கு ஏற்பட்டு விடுகிறது. அவ்வாறே. உங்களில் ஒருவர் தீய செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறார்; எந்த அளவுக்கெனில் அவருக்கும் நரகத்துக்கும் மத்தியில் ஒரேயொரு முழம் தான் உள்ளது. [அந்த ஒரு முழம் அளவுக்கும் அவர் தீமைகளைச் செய்து விட்டால் அவர் நிச்சயம் நரகம் செல்ல வேண்டிய நிலை உள்ளது]. இந்நிலையில், அவருக்கு எழுதப்பட்டுள்ள விஷயங்கள் அவரை முந்தி விடுகின்றன; அதன் காரணமாக அவர் சொர்க்கவாசிகளின் செயல்களைச் செய்து, சொர்க்கம்

புகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்து விடுகிறது. [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

எனவே, எனது சகோதர, சகோதரிகளே! அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தரும் செயல்களை நாம் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். இன்று நாம் அல்லாஹ்வின் பாதையில் இருப்பதற்கான அல்லாஹ்வின் அருளைப் பெற்றுள்ளோம்; ஆனால், வருங்காலத்தில் நமது இறுதி முடிவு என்னவாகும் என்பதை நாம் அறியமாட்டோம். எனவே, மற்றவர்களைப் பற்றி தவறாக நினைப்பதன் மூலம் நமது உள்ளத்தின் பரிசுத்தத்துக்கு நாம் களங்கம் ஏற்படுத்தி விடக் கூடாது. அதாவது, நமது உள்ளத்தை நாம் அசுத்தமாக்கி விடக் கூடாது.
நமது சகோதரர்களை பாவம் செய்பவர்களாகக் கண்டால், அல்லாஹ், ரசூலுக்குக் கட்டுப்படாத செயல்களைச் செய்பவர்களாக அவர்களைக் கண்டால், அவர்களின் நடத்தைகளில் நமக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவர்களின் சூழ்நிலைகளை அறிவதற்காக அவர்களிடம் முதலில் கேள்விகளைக் கேட்க வேண்டும். உடனே அவர்களைக் குறை கூற ஆரம்பித்து விடக் கூடாது; அவர்களுக்கு எதிராக விரைவில் தீர்ப்பளித்து விடக் கூடாது.

மேலும், அடுத்தவர்களின் விஷயத்தில் நாம் கிருபையுடன் நடந்து கொள்ள வேண்டுமென நமக்கு நாம் எப்போதும் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். மற்றவர்களைப் பற்றி கிசுகிசுத்துப் பேசுவதோ அவர்களைப் பற்றி அவதூறு கூறுவதோ கூடாது. மேலும், மற்றவர்கள் நம்மைப் பற்றி தவறாகப் பேசும் அளவுக்கு நாமும் நடந்து கொள்வது கூடாது என்ற இறைத்தூதர்[ஸல்] அவர்களின் கட்டளையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமது சகோதர, சகோதரிகளுடன் எப்போதும் கிருபையுடன் நடந்து கொள்வதன் மூலம் உறவுமுறைகளைப் பாதுகாக்கும் நல்லடியார்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! எப்போதும் அல்லாஹ்வின் கிருபையையும்

அவனது அன்பையும் பெற்றவர்களாக ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم**

## இரண்டாவது பிரசங்கம்

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.**

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَارَبَّ العَالَمِينَ.

رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُركُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضلِهِ يُعطِكُم، وَلَذِكرُ اللهِ أَكبَرُ، وَاللهُ يَعلَمُ مَا تَصنَعُونَ.